## 32.2 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் – இறந்தவர்களின் ஈமக்கிரியைச் சடங்கிற்கு வழங்கப்பட்ட தொகை ரூ.200/– லிருந்து ரூ.500/– ஆகவும், ஆண்டு வருமான வரம்பை ரூ.5000/– லிருந்து ரூ.24,000/– ஆகவும் உயர்த்துதல்

---

ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நல (தொ.த) துறை

அரசாணை (நிலை) எண். 144 நாள் : 6.8.1997

படிக்க :

1. அரசாணை (நிலை) எண் 465 சமூக நலத்துறை நாள் 24.7.78.
2. அரசாணை (நிலை) எண் 1137 சமூக நலத்துறை நாள் 18.4.86.
3. அரசாணை (நிலை) எண் 125 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை நாள் 7.2.92.

**ஆணை**

பட்டியல் இனத்தவர் பட்டியல் பழங்குடியினர் மற்றும் கிருஸ்துவ மாதத்திற்கு மாறிய பட்டியல் இனத்தவர் இறந்தால் அண்ணாரின் ஈமச்சடங்கிற்காக இறந்தோரின் குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ.5000/–த்திற்கு மிகாமல் இருந்தால் ரூ.200/– உதவி தொகை வழங்க மேலே படிக்கப்பட்ட அரசு ஆணை 3–ல் குறிப்பிட்ட படி ஆணை பிறப்பிக்கப்பட்டிருந்தது இந்த உதவி தொகையை உயர்த்துவது குறித்து அரசு ஆய்வு செய்தது

2. ஆய்வுக்குபின் பட்டியல் இனத்தவர் பட்டியல் பழங்குடியினர் மற்றும் கிருஸ்துவ மதம் மாறிய பட்டியல் இனத்தவர்களில் எவரேனும் இறந்தால் அன்னாரின் ஈமச்சடங்கிற்காக வழங்கப்பட்டு வந்த உதவி தொகை ரூ.200/–ல் இருந்து ரூ.500/– உயர்த்தி வழங்கவும் உதவி தொகை வழங்கியதற்கு இறந்தவரின் குடும்ப ஆண்டு வருமான வரம்பை ரூ.5000/–ல் இருந்து ரூ.24,000/–ம் ஆக உயர்த்தவும் அரசு ஆணை பிறப்பிக்கப்படுகிறது இந்த ஆணை 15.4.97 முதல் நடைமுறைக்கு வரும்,

3. மேற்காணும் செலவினம் பின்வரும் கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்

2225– பட்டியல் சாதியினர் பட்டியல் பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 02– பட்டியல் பழங்குடியினர் நலன் – 80 – ஏனைய செலவுகள் – திட்டத்தில் சேராதது AA ஈமக்கடன் செலவுக்கு தொகை கொடுத்தல் – 09 – உதவி மான்யங்கள் (கு.தொ.கு 2225 02 80 AA 0909)

4. இது ஒரு புது துறைப்பணி குறித்த (New Instrument of Service) செலவாகும் காலப்போக்கில் இதற்கு சட்டமன்ற பேரவையில் ஒப்புதல் பெறப்படும், ஒப்புதல் கிடைக்கும் வரையில் முதற்கண் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதித்துறை (வ.செ.பொ) தனியாக பிறப்பிக்கப்படும். எதிர்பரா செலவு நிதியிலிருந்து முன்பணம் வாங்குவதற்கு தேவையான விண்ணபத்தை உரிய படிவத்தில் இரு படிகளில் வெளியிடும் ஆணை நகலுடன் நிதித்துறை (வ.செ.பொ) க்கு அனுப்பிவைக்கும்படி ஆதிதிராவிடர் மற்றம் பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

5. இவ்வாணை நிதித்துறையின் ஒப்புதலை அதன் அ.சா.கு எண் 357 / DS (RP) /97–நாள் 6.8.97–ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரா. கிருஸ்துதாஸ் காந்தி**
அரசு செயலாளர்